செ.வெ.எண்.109 நாள்.22.02.2018.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர்**

**திரு.சந்தீப் நந்தூரி.,இ.ஆ.ப., அவர்களின் செய்திக் குறிப்பு :வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்திற்கான - ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் திருநெல்வேலி மாவட்ட பொது மக்களிடமிருந்து கேட்டறிதல்**

இந்திய அரசின் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை (Costal Regulation Zone) 2011ன்படி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டம் உள்ளடங்கிய தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி நீடித்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் (NCSCM), சென்னை என்ற இந்திய அரசின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு இத்திட்டம் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 வழிமுறைகளின்படி திருநெல்வேலி மாவட்டம் உள்ளடங்கிய தமிழ்நாட்டிற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கையின் இணைப்பு 1, பத்தி IV(a)ன் படி திருநெல்வேலி மாவட்டம் உள்ளடங்கிய தமிழ்நாட்டிற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசுத் துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகங்கள் / குழுக்கள், பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை அறிய 19.02.2018 அன்று சுற்றுச்சூழல் துறையின் இணையதளத்திலும் (http://www.environment.tn.nic.in) மற்றும் சுற்றுச்சூழல் துறையின் ENVIS மையத்தின் இணையதளத்திலும் (http://www.tnenvis.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நிறுவனங்கள், பொது மக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும், திருநெல்வேலி மாவட்டம் குறித்தான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் மீதான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின், இத்திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேதியில் இருந்து 45 நாட்களுக்குள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுத்து மூலம் இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, பனகல் மாளிகை, சைதாபேட்டை, சென்னை - 15 அவர்களுக்கு 06.04.2018க்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**